1975 அக்டோபர் 30]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : வேளாண்மைக் கல்லூரி தொடங்குவதற்கு 500 ஏக்கருக்கு மேல் குறைந்த பட்சம் தேவை. அதிகமாக இருந்தால்கூட நல்லது. குறிப்பாகச் சொல்கிறேன். உத்திரப்பிரதேசத்தில் பந்த் நகர் என்ற இடத்திலே விவசாயக் கல்லூரி ஒன்று இருக்கிறது. அந்த விவசாயப் பல்கலைக் கழகத்திலே 10 ஆயிரம் ஏக்கர் நிலம் இருக்கிறது. அவர்கள் அதனால் வெகு லகுவாகக் காரியங்களைச் செய்துகொள்ள முடிகிறது. அந்த முறையிலே அவர்களுக்கு அதிலேயிருந்து 1 கோடியே 90 லட்சம் ரூபாய் வருவாய் இருக்கிறது. கல்லூரி தொடங்குகிற இடத்திலே, பல்கலைக் கழகத்தைப் பற்றி மட்டும் சொல்லவில்லை, கல்லூரியைத் தொடங்குகிற இடத்திலேகூட போதிய இடம் தேவைப்படுகிறது, அது மட்டுமல்ல, அங்கே ஆராய்ச்சி சிறப்பாக அமைவதற்கும் வசதியாக இருக்கும் என்பதை மனதில் கொள்ள வேண்டும். 500 ஏக்கர் தேவை. இடம் இருந்தால் அது பின்னாலே ஆலோசிக்க வேண்டிய காரியம்.

Amalgamated fund for Ex-servicemen.

* 140 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Labour and Transport be pleased to state—

(a) whether it is a fact that a Committee has been set up by the Government to administer the Amalgamated Fund for Ex-servicemen; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) மத்திய அரசு மே மாதம் 1967-ஆம் ஆண்டு முன்னாள் இராணுவ வீரர் நலனிற்காக ஏற்படுத்திய சிறப்பு நிதியில் தமிழ் நாட்டிற்கு அளிக்கப்பட்ட பங்கு தொகையினை பராமரிக்க அறக் கட்டளை விதியின் (Charitable Endowments Act) கீழ் குழு ஒன்றை நியமித்தது. சனவரி 1970-ம் ஆண்டில் தமிழ் நாட்டில் போருக்குப்பின் இராணுவத்தினர் மறுவாழ்விற்காக ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த நிதியின் மீதி தொகையும் இச்சிறப்பு நிதியுடன் இணைக்கப்பட்டு தற்போது "தொகுப்பு நிதி" (Amalgamated Fund) என வழங்கப்பட்டு முன்னாள் போர் வீரருக்கும் அவரைச் சார்ந்தோருக்கும் அவர்களின்

நலவிற்காக கடனுதவியும், தொழில் மற்றும் ஏனைய கல்வி களுக்கான படிப்பு உதவித்தொகையும் வழங்க பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்நிதியின் மாநில செயற்குழு பின்வருபவர்களை கொண் டுள்ளது :—

தலைவர் :—மேதகு ஆளுநர்.

துணைத்தலைவர்:—மாண்புமிகு தொழிலாளர் நல-போக்குவரத்துத்துறை அமைச்சர்.

துணைத்தலைவர்: ஜெனரல் ஆபீஸர் கமாண்டிங், ஆந்திரா, தமிழ்நாடு கர்நாடகம் மற்றும் கேரள இராணுவ வட்டாரம் General Officer Commanding, Andhra, Tamil Nadu, Karnataka and Kerala Area.

உறுப்பினர்கள்:—

1. தலைமைச் செயலாளர் (தமிழ் நாடு அரசு).
2. திரு. மருதைப்பிள்ளை } தமிழ்நாடு அரசின் நியமனம்.
3. திரு. கோவை செழியன் (சட்டமன்ற உறுப்பினர்) } தமிழ்நாடு அரசின் நியமனம்.
4. இரு ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள் } மத்திய அரசின் முப்படைத் தலைவர்கள் குழுவின் நியமனம்.

திரு. என். கே. பழனிசாமி : இந்த பண்டுக்கு மத்திய சர்க்கார் எவ்வளவு கொடுக்கிறது? இந்த நிதியிலிருந்து எவ்வளவு பேர்கள் கடன் பெற்றிருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, இதற் காக தேசியப் பாதுகாப்பு நிதியிலிருந்து மத்திய அரசு 25,85,100 ரூபாய் தந்திருக்கிறது. மத்திய அரசினுடைய மூன்றாண்டு மானியமாக 14,92,400 ரூபாய் கொடுத்திருக்கிறது. அதற்கு இணை மானியமாக நம்முடைய மாநில அரசு தரவேண்டியிருக் கிறது. மாநில அரசு 14,92,400 ரூபாய் தந்திருக்கிறது. ஆக அந்தத் தொகை 55,69,900 ஆக உயர்ந்திருக்கிறது. கடன் உதவிக்காக அசையாச் சொத்துக்களின் மதிப்பில் மூன்றில் இரண்டு பங்குக்கு மேற்படாமல் முன்னாள் போர் வீரர்களுக்கு, தொழில் வாணிபம் செய்வதற்காக கடன் உதவி அளிக்கிறோம். ஒருவருக்கு 25 ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாமல் கொடுத்துக் கொண்டு வருகிறோம். அசையாச் சொத்துக்கள் இல்லாத

1975 அக்டோபர் 30]

நிலையில் பாதுகாப்புப் படையில் 15 வருடம் பணிசெய்திருந்தால் மாவட்ட ஆட்சியாளர் பரிந்துரையினபேரில் 2 ஆயிரம் கடன் அளிக்கிறோம். அவர்களுக்கு உள்ள தொழில், வாணிபம், தொழிலில் அவர்களுடைய திறமை, பயிற்சி இவைகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டு மாவட்ட ஆட்சியாளர் கொடுக்கிற பரிந்துரையின் பேரில் கடன் உதவி காசோலை மூலம் வழங்கப்படுகிறது. இது துவங்கியதிலிருந்து இதுவரையில் 1,417 பேர் வீரர்களுக்கு ரூ. 38,21,000 அளவிற்கு கடன் உதவி வழங்கப்பட்டிருக்கிறது.

நாட்டறம்பள்ளியில் தொழில் பயிற்சிப்பள்ளி

* 141 வினா—திரு. டி. சி. திம்மராயக் கவுண்டர்: மாண்புமிகு தொழிலாளர் நலன்-போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருப்பத்தூர் வட்டம், நாட்டறம்பள்ளியில் (I.T.I.) இன்ஸ்டிடியூட் தொடங்கும் யோசனை அரசுக்கு உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

தஞ்சாவூர் மாவட்டத்தில் மீன்பிடித் தளங்கள்

* 142 வினா—திரு. என். கிட்டப்பா:

திரு. வை. பாலசுந்தரம்: மாண்புமிகு சமூகநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) நடப்பு ஆண்டில், தஞ்சை மாவட்டத்தில் மீன்பிடித் துறைமுகங்கள் ஏற்படுத்தும் திட்டம் எந்த அளவுக்கு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது?

(இ) எங்கெங்கு ஏற்படுத்தப்படும்?

(உ) அவைகளுக்கான மதிப்பீட்டுத் தொகைகள் யாவை?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: (அ), (இ) & (உ) தஞ்சை மாவட்டத்தில், மல்லிப்பட்டணம், கோடிக்கரை ஆகிய இரண்டு இடங்களில் மீன்பிடி கப்பல் தளங்கள் அமைக்க அரசு